ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## வித்யாரண்யருடன் ஸம்வாதம்

**இப்படி ஸ்வாமி தம்மை ஆச்ரயித்த சிஷ்யர்களினால் ஸமர்ப்பிக்கப்படும் தண்டுலாதிகளைக் கொண்டே அன்றன்றைக்குத் தம் க்ருஹ க்ருத்யங்களை நடத்தி அதிவிரக்தாக்ரேஸராய் எழுந்தருளியிருப்பதைக் கேட்டு, அக்காலத்தில் விஜயநகர ஸமஸ்தானத்தில் உத்தம ஸ்தானத்தை வஹித்துவந்த வித்யாரண்யர், ஸ்வாமியின் மஹிமையை அறிந்து, த்ரவ்யாதிகள் கொடுப்பதாகச் சொல்லியனுப்பினார். ஸ்வாமி தமக்கு த்ரவ்யாதிகளில் கொஞ்சம் கூட அபேக்ஷை இல்லை என்றும், தாம் ராஜத்வாரம் செல்வதில்லை என்றும், தம் வைராக்யம் இருக்கும் ப்ரகாரத்தை வைராக்ய பஞ்சகம் (67) என்னும் ஒரு ஸ்தோத்ரத்தில் எழுதியனுப்பினார். இங்கு எழுந்தருளியிருக்கும்பொழுது ஆஹார நியமம் (68) என்னும் ஒரு ப்ரபந்தத்தையும், தேவராஜன் அத்திகிரி க்ஷேத்ரத்தில் ஆவிர்பவித்தருளிய ப்ரகாரங்களை நிரூபித்து ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் [மெய்விரத மான்மியம்] (69) என்னும் ஒரு தனி ரஹஸ்யத்தையும் அருளிச்செய்தார்.**

## ப்ருஹ்மச்சாரிக்குப் பணம் வரவழைத்துக் கொடுத்தல்

**இப்படி ஸ்வாமி எழுந்தருளியிருப்பதைக் கண்டு ஸஹியாமல் சிலர் ஸ்வாமியை எப்படியாவது அவமானப்படுத்தவேண்டும் என்று கொண்டு அந்த ஊருக்குத் தன் கல்யாண விஷயமாய் யாசகம் செய்யவந்த ஒரு ப்ருஹ்மச்சாரியிடம் "அதோ ஸ்வாமி சிஷ்யர்களுடன் எழுந்தருளியிருக்கிறார், நீ போய்த் தண்டன் ஸமர்ப்பித்துக் கேள், உனக்கு வேண்டிய த்ரவ்ய ஸஹாயம் செய்வார்" என்று சொல்ல, அவனும் அந்த ஊருக்குப் புதிதாகையினால் அதை நம்பி ஸ்வாமியிடம் சென்று ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் ஆச்சர்யப்பட்டு, "நீ பணக்காரர்களிடம் போகாமல் என்னிடம் ஏன் வந்தாய்?" என்று கேட்க, அவனும் "அடியேன் இந்த ஊருக்குப் புதிது, இந்தத் தெருவின் ஆரம்பத்தில் இருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்களிடம் என் அபீஷ்டத்தைத் தெரிவித்தேன், அவர்கள் தேவரீரிடம் வரும்படிச் சொன்னார்கள்" என்று தெரிவிக்க, ஸ்வாமியும் "அப்படியா? பாகவதோத்தமர்கள் அப்படி அடியேனைக் கொண்டு தேவரீருக்கு த்ரவ்யம் சேர்ப்பிக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார்களேயாகில் அதற்கு**

இடையூறு ஏது? பகவானுடைய ஸங்கல்பமாயிருந்தால் அதற்கு ஒரு ஸமயத்தில் இடையூறு நேர்ந்தாலும் நேரக்கூடும். பீஷ்மருடைய ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுவதற்காக வேதம் போன்ற தன் வார்த்தையையும் பொய்யாக்கினான் அல்லவா? ஆகையினால் பாகவதர்கள் அனுக்ரஹம் ஒருகாலும் வீணாகாது" என்று அனுஸந்தித்துவிட்டு "யோகாரம்ப" என்று ஆரம்பிக்கும் ஸ்ரீஸ்துதி ஸ்லோகத்தை அனுஸந்திக்க, இவருக்கு நாம் கிஞ்சித்காரம் செய்ய ஸமயம் வாய்க்குமோ என்று காத்திருந்த பெரியபிராட்டியாரும் இவர் இருந்த திக்கை நோக்கி, அபரிமிதமான தனராசிகளை, ஸ்வாமியின் திருமுன்பே வந்து விழும்படிச்செய்ய, ஸ்வாமியும் அந்த ப்ருஹ்மச்சாரியை அவற்றை எடுத்துக்கொண்டு போகும்படிச் சொல்ல, ஸ்வாமியினுடைய கடாக்ஷத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட மனதை உடைய அவன், தன்னுடைய விவாஹத்திற்கு மாத்திரம் அவச்யம் வேண்டிய த்ரவ்யத்தை மட்டும் எடுத்துக்கொண்டு த்ருப்தனாய், ஸ்வாமியை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டுத் தன்னுடைய ஊருக்குப் புறப்பட, ஸ்வாமி "உம்மை உத்தேசித்தே இந்த த்ரவ்யம் வரவழைக்கப்பட்டது, மிகுதி வைக்காமல் எடுத்துக்கொண்டு செல்லும்" என்று சொல்ல, அவன் "ஸ்வாமி, அடியேன் தேவரீரை என்னுடைய விவாஹத்திற்காக த்ரவ்யம் யாசித்தேன், தேவரீரும் க்ருபை பண்ணிற்று. இதற்குமேல் எனக்கு வேண்டியதில்லை" என்று பதில் சொல்ல, முன்பு ரகுமஹாராஜனுக்கும் கௌத்ஸ மஹர்ஷிக்கும் நடந்த ஸம்வாதமோபாதி இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நிர்ப்பந்தித்துக்கொண்டு நிற்கையில், ப்ருஹ்மச்சாரியை ஸ்வாமியிடம் அனுப்பியவர்கள், "ஸ்வாமியிடம் பணம் கிடையாது, அடியேனிடம் ஒரு காசு கூட இல்லையே என்று வருத்தப்படுவார், இந்த பரிபவத்தைப் பார்க்கவேண்டும்" என்று எண்ணி அங்கே வர, ஏராளமாகப் பணம் கீழே கொட்டிக் கிடப்பதையும், ப்ருஹ்மச்சாரி கையில் ஒரு மூட்டையை வைத்துக்கொண்டு அதற்குமேல் தனக்கு வேண்டியதில்லை என்று மறுப்பதையும், ஸ்வாமி அவனை எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்ததையும் கண்டு ஆச்சர்யப்பட்டு நிற்கையில், ஸ்வாமி அவர்களை "தேவரீர்களுடையது நியமனத்தினால் அடியேன் இவருக்கு உதவி செய்யும்படியான பாக்யம் பெற்றேன், மிகுதியான த்ரவ்யம் எனக்கு வேண்டியதில்லை என்கிறார், அடியேனுக்கும் வேண்டியதில்லை, தேவரீர்களாகிலும் இவற்றைத் திருவுள்ளம் பற்றியருள வேண்டும்" என்று ப்ரார்த்தித்து, அவர்களிடம் அவற்றைச் சேர்த்த பிறகே தாம் ஸந்துஷ்டரானார். ஸ்வாமியினுடைய ஆச்சர்ய சக்தியையும் பார்த்து, தாங்கள் செய்த கார்யத்தைப் பார்த்துத் தாங்கள் செய்த கார்யத்திற்காகத் தாங்களே தங்களை மிகவும் நொந்துகொண்டு அவர்கள் தங்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். இப்படி இங்கே எழுந்தருளியிருக்கையில், ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளி (70), ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம் (71), ஸ்ரீ தத்வத்ரய சுளகம் (72), ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம் (73), ஸ்ரீ ஸாரதீபம் (74) என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார்.

## தக்ஷிண திவ்யதேச யாத்திரை

இப்படி எழுந்தருளியிருக்கும்பொழுது தக்ஷிண திவ்யதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளத் திருவுள்ளம் பற்றிக் காஞ்சீபுரத்தை விட்டுப் புறப்பட்டு, திருவாலியில் கலியனையும், இந்த ஸம்ப்ரதாயம் ஸ்ரீமந்நாதமுனிகளால் ப்ரவ்ருத்திக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த திருக்குடந்தையில் ஸ்ரீஆராவமுதாழ்வானையும் திருவடி பணிந்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நாச்சியாரை ஸேவித்து, அவள் விஷயமாக ஸ்ரீகோதா ஸ்துதி (75) என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார்.

திருநகரியில் ஆழ்வாரைத் திருவடிதொழுதுநிற்க, நாட்கமழ் மகிழ்மாறனும் திருமாலை முதலிய ப்ரஸாதங்களை அனுக்ரஹித்து, "நம்முடைய திருவுள்ளத்தை அடியொற்றினதாயும், ஸ்ரீ ஆளவந்தாருடைய சரம திருமேனி முன்பே எம்பெருமானார் தாம் செய்தருளிய ப்ரதிஜ்ஞைகளில் ஒன்றை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீபாஷ்யகாரருடைய ஆஜ்ஞையினால் திருக்குருகைப்பிரான் பிள்ளானால் செய்யப்பட்டதுமான ஆறாயிரப்படிக்கு நீர் விஸ்தாரமான வ்யாக்யானம் அருளிச்செய்யும்" என்று நியமித்தருளினார்.

திருக்கோளூரில் ஸ்ரீ மதுரகவிகளை மங்களாசாஸனம் செய்து, அருகாமையிலுள்ள மற்ற திவ்யதேசத்து எம்பெருமான்களை ஸேவித்துத் திருவணையைத் தர்சனம் செய்தருளி, திருநாராயணபுரம் சென்று எம்பெருமானாரைத் தண்டம் ஸமர்ப்பித்து, அவர் விஷயமாக ஸ்ரீயதிராஜ ஸப்ததி (76) என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து, திருவனந்தபுரத்தில் ஸ்ரீ அனந்த பத்மநாபனைப் பணிந்து இதர திவ்யதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்துகொண்டுவரும் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மறுபடியும் சில அத்வைத வித்வான்கள் வந்து தங்களை ஜயிக்கவேண்டுமென்றும், அதுவரையில் ஸந்நிதியில் திருவாராதனாதிகள் நடத்தக்கூடாதென்றும் ஆக்ஷேபிக்க, கோயில் அதிகாரிகளும் உடனே ஸ்வாமியைத் தேடி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரும்படிச் சிப்பந்திகளை அனுப்ப, அவர்களும் ஸ்வாமியை மார்க்கத்தில் கண்டு ஸமாசாரத்தை விண்ணப்பம் செய்ய, ஸ்வாமியும் மிகவும் சோகாக்ராந்தராய் அதி த்வரையாகப் புறப்பட்டருளினார்.

## ஹயக்ரீவனுடைய திருவிளையாடல்

இப்படி ஸ்வாமி மிகவும் வேகமாய் நடுவில் ஓரிடத்திலும் தங்காமல், தம்முடைய நித்ய கர்மானுஷ்டானாதிகளையும் சாஸ்த்ரம் இசைந்த அளவில் ஸங்க்ரஹித்து அனுஷ்டித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்தை உத்தேசித்து எழுந்தருளிக் கொண்டிருக்கும்பொழுது, மார்க்கத்தில் ஒரு நாள் தளிகை அமுது செய்ய

ஸந்தர்ப்பப்படாமல் போக, ஸ்வாமி கேவலம் தோயத்தை நிவேதனம் செய்துவிட்டு மேல் யாத்திரையாகச் சென்று இரவில் ஒரு த்ரைவர்ணிகனுடைய க்ருஹத்திற்கு அருகாமையில் கொஞ்சம் விச்ரமித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஸ்ரீ ஹயக்ரீவன் தம்முடைய நிஜஸ்வரூபத்துடன் வெளிக்கிளம்பி அந்த த்ரைவர்ணிகனுடைய தான்யத்தை யதேஷ்டமாய் அமுது செய்ய, காவல் காத்திருந்த அவனும் தன்னால் ஆன மட்டும் துரத்திப்பார்த்து முடியாமல், ஸ்வாமி அங்கே ஸயனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, குதிரை ஸ்வாமியினுடையது என்று நினைத்து ஸ்வாமியை எழுப்பிக் குதிரையைக் கட்டும்படிச் சொல்ல, ஸ்வாமியும் திடுக்கிட்டுச் சற்று யோசித்து, இது ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருவிளையாடல் என்றுணர்ந்து, அவனைக் கொஞ்சம் பால் கொண்டுவரச் சொல்லித் தம்மைப் பரிசுத்தம் செய்துகொண்டு, அந்தப் பாலைத் தம்முடைய திருவாராதனத்தில் இருக்கும் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு அமுது செய்விக்கக் குதிரையும் மறைந்துவிட்டது. மறுநாள் காலையில் அந்த த்ரைவர்ணிகன் வயலைப் பார்க்கச் சென்றபொழுது ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருக்குளம்புகள் பட்ட ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஸ்வர்ணக் காசு இருப்பதைக் கண்டு மிகவும் ஸந்துஷ்டனானான்.

## திருவரங்கத்தில் திருவாராதனம் நடத்திவைத்தல்

**இப்படி ஸ்வாமி அதிவேகமாய் ப்ரயாணம் செய்து ஸ்ரீரங்கம் அடைந்து, க்ருஷ்ணமிச்ரனை முன்னிட்டுக்கொண்டு வந்த அத்வைத வித்வான்களுடன் தர்க்கித்து, அவர்களைத் தோற்கடித்து, திருவாராதனம் யதா க்ரமம் நடக்கும்படி ஏற்பாடு செய்தருளினார். க்ருஷ்ணமிச்ரனும் தன்னுடைய வம்சஸ்தரான மற்றொரு க்ருஷ்ணமிச்ரனால் அத்வைத மதக் கொள்கைகளைத் தழுவி எழுதப்பட்ட ப்ரபோத சந்த்ரோதயம் என்னும் ஒரு நாடகத்தைக் காட்ட, ஸ்வாமியும் தாம் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் (77) என்னும் நாடகம் அருளிச்செய்திருப்பதைத் தெரிவித்தார். அவனும் பக்னனாய் ஸ்வாமியை சாஸ்த்ரத்தில் வெல்லமுடியாதென்பதை உணர்ந்து, லோக வ்யவஹாரத்தில் ஏமாற்றலாம் என்று பார்த்து, "ஸ்வாமி தானே என்னை ஜயித்தது, இங்கிருக்கும் மற்றவர்களால் முடியவில்லையல்லவா? ஆகையினால் தேவரீருக்குப் பிறகு எனக்கு எல்லா மர்யாதைகளையும் நடத்திவைக்கவேண்டும்" என்று சொல்ல, ஸ்வாமியும் அவனுடைய உள் அபிப்ராயத்தை அறிந்து, அவ்விஷயத்திலும் அவனை அவமானப்படுத்தத் திருவுள்ளம் பற்றி, அப்படியே ஆகட்டும் என்று அப்யுபகமம் செய்து, அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோருக்கும் தீர்த்தம், ப்ரஸாதம் முதலியவைகளைக் கொடுக்கும்படிச் செய்வித்துக் கடைசியில் தாம் அவைகளைப் பெற்று, தமக்கும் பிறகு க்ருஷ்ணமிச்ரனுக்குக் கொடுக்கும்படிச் செய்தார். இதைக்கண்டு அவன் பக்னனாய் ஸ்வாமியின் ஸாமர்த்யத்தில் ஈடுபட்டு மிகவும் ப்ரவணனாய்த் தன் தேசம் போய்ச்சேர்ந்தான். இங்கு சிரகாலம் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் 'டிண்டிம கவி' என்கிற ப்ரஸித்தமான கவி ஒருவன் வந்து ஸ்வாமியுடன் வாதித்துத் தோல்வியடைந்து,**

**தான் செய்திருந்த ராமாப்யுதயம் என்ற காவ்யத்தைக் காட்ட, ஸ்வாமியும் தம்முடைய ஸ்ரீ யாதவாப்யுதயம் (78) என்னும் காவ்யரத்னத்தைக் காட்டியருளினார். அவனும் பக்னனாய் ஸ்வாமியின் கவிதையில் ஈடுபட்டு அதனுடைய சைலியை அனுஸரித்து பாகவத சம்பூ என்னும் க்ரந்தத்தைச் செய்து ஸ்வாமியிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு போனான்.**

## 'ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:' தனியன் அவதாரம்

இப்படி ஸ்ரீரங்கத்தில் ப்ரதிவாதிகளை நிரஸனம் செய்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்வாமியின் திருக்குமாரர் வேதாந்த காலக்ஷேபம் செய்ய ஆரம்பிப்பதற்காக ஸ்வாமியின் விஷயமான இந்தத் தனியனை

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ॥

என விண்ணப்பம் செய்தார். இது அவதரித்த தினம், கலி 4430, சுக்ல வருஷம் சித்திரை மாதம் புனர்வஸு நக்ஷத்ரம் கூடிய சுபதினம். இந்த ச்லோகத்தின் அர்த்தபுஷ்டியைப் பார்த்து ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர் முதலியவர்கள் ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் இதைத் தனியனாக அனுஸந்திக்கும்படியாக நியமிக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் அப்படியே அப்யுபகமம் செய்தருளினார்.



சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு

தொடரும். . .